*பிரசங்கம் 4*

# சபை–பரிசுத்தவான்களின் அமைப்பு (மன்னிக்கப்பட்ட பாவிகள்!)

## (1 கொரிந்தியர் 6:9–11)

"சபை என்பது பாவிகளுக்கான மருத்துவமனை, காட்சிக்காக உள்ள அரும் பொருட் காட்சியகம் அல்ல" என்று யாரோ சொன்னார்கள். சபையில் இருக்கும் ஜனங்கள் மனித வர்க்கத்திற்குத் தெரிந்த அனைத்துப் பாவங்களையும் செய்த குற்றத்தையுடையவர்கள். ஒரு பிரசங்கியார் பிரசங்க மேடையில் நிற்கும் போது, அவர் தன் முன் இருக்கும் கூட்டத்தில் விபச்சார வேசித்தனம் செய்தவர்கள், மனைவியைத்தவறாக நடத்தினவனும், குழந்தைகளை கெடுத்தவனும், கொள்ளைக்காரனும் மற்றவர்களை கொலை செய்தவனும், சிறையிலே வைக்கப்பட்டவனும் - இச்சைக்கு அடிமைப்பட்டவனும் பேராசைக்காரனும், பகைமையுள்ளவனும், மற்றும் பெருமைக்காரனுமாயிருந்தவர்களைப் பார்ப்பார்.

சபை பரிபூரணப்பட்ட ஜனங்களின் அமைப்பல்ல; கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டவர்களின் ஜனங்களால் அமைவு பெற்றது. சபையில் இருக்கும் ஜனங்களுக்கும் சபைக்குப் புறம்பே இருக்கும் ஜனங்களுக்கும் வித்தியாசம் என்னவெனில், சபையில் இருப்பவர்கள் "பரிசுத்தவான்களும்" சபைக்குப் புறம்பே இருப்பவர்கள் "பாவிகள்" என்றும் பொருளல்ல; எளிமையாகச் சொல்லின் சபைக்குள் இருப்பவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள், சபைக்குப் புறம்பே இருப்பவர்கள் இரட்சிக்கப்படாத பாவிகள்.

*1 கொரிந்தியர் 6:9-11*ல் சிறந்த விளக்கம் கொடுக்கப் படுவது போல, சபை அங்கத்தினர்களுக்கும் சபைக்குப் புறம்பே இருக்கும் பாவிகளுக்குமிடையேயான உறவு முறையை வேறே எந்த புதிய ஏற்பாட்டு வசனப் பகுதியும் விளக்கம் அளிப்பதில்லை. மேலே சொன்ன இந்த வசனப் பகுதி சபையைக் குறித்தும் பாவிகளைக் குறித்தும் மூன்று குறிப்பிடத்தக்க உண்மைகளைப் போதிக்கிறது.

### *சபை பாவிகளின் அமைப்பைக் கொண்டது (6:9-11அ)*

#### கொரிந்து சபைக்கு பவுலின் செய்தி

இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல் கொரிந்து சபையார்களை

நீதிமான்களாய் வாழும்படி போதிக்கிறார். உதாரணமாக, ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடப் போகாமல் இருக்கவும் (1 கொரிந்தியர் 6:1-8) வேசித்தனம் பண்ணாமலிருக்கவும் (1 கொரிந்தியர் 6:15-20) போதிப்பதை உள்ளடக்கியது.

கொரிந்துப் பட்டணத்தில் பொதுவாகக் காணப் படும் பாவங்களை தவிர்க்கும்படி மனதில் சிந்திக்க வைக்க, பவுல் பொதுவாக, குறிப்பிட்ட பாவங்களைச் செய்தவர்கள், "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" என்று சொன்னார். "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது" என்பது பரலோகத்துக்குப் போக முடியாது என்று சொல்வதற்குச் சமமானது (கலாத்தியர் 5:21; 2 பேதுரு 1:11ஐ ஒப்பிடுக).

வசனங்கள் 9, 10ல் பரலோகத்துக்குப் போக விடாமல் தடுக்கிற பத்து பாவங்களை பவுல் பெயரிடுகிறார்.

1. வேசித்தனம் (பாலுறவு ஒழுங்கீனம்; NIV) - பாலுறவு ரீதியான பலவகைப் பாவங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த சொல்.
2. விக்கிரக ஆராதனை - பொய்யான தேவர்களைத் தொழுது கொள்ளுதல்.
3. விபச்சாரம் - தனது வாழ்க்கைத் துணையல்லாத ஒருவனுடன் பாலியல் உறவு கொள்ளுதல்.
4. பெண் தன்மை கொண்ட ஆண்களுடன் (ஆண் புணர்ச்சி; RSV; ஆண் விபச்சாரம்; NRSV; NIV) - முறையான பாலுறவை மாற்றுதல்.
5. ஓரின சேர்க்கை - (சோதோமிய உறவு முறை; NRSV) - தன்னைப் போன்ற பாலினத்துடன் பாலுறவு வைத்துக் கொள்ளுதல்.
6. திருடுதல் - கொள்ளையடித்தல் அல்லது களவாடுதல், பிறருடைய உடமைகளை எடுத்துக் கொள்ளுதல்.
7. பொருளாசை (பேராசை; RSV). பிறருக்குரியவைகளை அடைய வேண்டுமென்ற வலிமையான ஆசை, மேலும் மேலும் சொத்துக்களைக் குவிக்க வேண்டுமென்ற முடிவுடன் செயல்படுதல். அது "அளவுக்கு மீறிய ஆசை, நேசம், பணமோகம்" எனலாம்.[1]
8. மதுபான வெறி.
9. உதாசினம் (புறங் கூறுதல்; NIV) - மற்றவர்களைக் குறித்து புறம் பேசுதல்.
10. கொள்ளை - வஞ்சித்து மறைமுகமாய் பணம் பிடுங்குதல் (கொள்ளையிடுதல்; RSV).

இந்தப் பாவங்கள் மட்டும் மக்களை பரலோகத்துக்கு புறம்பாக்குவதாக பவுல் கூறுவதாகத் தோன்றவில்லை. மாறாக, இந்த பத்துப் பாவங்களும் மற்ற அனைத்து அநீதிகளுக்கும் முகவர்கள். பொதுவான இந்தப் பாவங்களைச் செய்கிறயாரும் "தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளமாட்டார்கள்."

### நமக்கு பவுலின் செய்தி

மேலே குறிப்பிட்ட இந்த வரிசைப் படுத்தப்பட்ட பாவங்களிலிருந்து நாம் என்ன உணர்ந்து கொள்ள வேண்டும்?

1. *வரிசைப் படுத்தப்பட்டுள்ள செயல்கள் யாவும் பாவங்களே.* தேவன்

அவைகளை பாவம் என்று கூறுவதால் அவைகள் பாவங்களே. நாம் திருமறையை நேசிக்கக் கூடியவர்களாயிருந்தால், தேவன் இவைகளைக் குறித்து என்ன எண்ணம் கொண்டிருந்தாரோ அதே எண்ணத்தை நாமும் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக, ஆண் புணர்ச்சி அல்லது சுய புணர்ச்சியை எடுத்துக் கொள்வோமாகில், சுய புணர்ச்சியை செய்வது ஒரு பாவம் என்பது போல் பேசுவோர் அதை மூடத்தனமான மத வெறியைக் காட்டுகிறது என்று அநேகர் நம்புகின்றனர். ஓரின சேர்க்கையை அவர்கள் வெறும் பாலுணர்வு மனச்சாய்வு அல்லது ஒரு வேறுவழியான வாழ்க்கைமுறை என்று நினைக்க முற்படுகின்றனர். சில சுய புணர்ச்சிகாரரர்கள் அந்த நாகரிக வாழ்க்கைக்காகவே "திட்டமிட்டு" செயல்படுகின்றனர் - ஏனெனில் அவர்களின் பொதுவான ஜோடனைகளால் அவர்கள் சுய புணர்ச்சிக் காரரர்களாகத்தான் வாழமுடியும், வேறுவகையில் வாழமுடியாது என்கின்றனர். எப்படியிருப்பினும் நாம் திருமறையை விசுவாசிப்போமேயானால் அந்த எண்ணத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

2. *இந்தப் பாவங்களெல்லாம், நித்தியத்திற்கான விளைவுகளைப் பெறுவதில் சமமானது*. சமுதாய, சரீர, தற்காலிக விளைவுகளும், சில பாவங்கள் மற்ற பாவங்களைக் காட்டிலும் மோசமானவை என்ற அடிப்படையில் அமையலாம், ஆகிலும் முழுமையான (ஒட்டு மொத்த) விளைவு என்று வரும் போது, எல்லா பாவங்களுக்கும் சமமானதாகவே உள்ளது. உலகத்திலுள்ள மிகவும் ஒழுங்கங்கெட்ட, மோசமான நடத்தையுள்ள மக்களில் சிலர் - மோசமான நடத்தை என்ற பொருளில் பார்த்தால் வேசித்தனம் செய்வதில் எவ்விதத்தவறையும் காணவில்லை என்கின்றவர்கள் - உதாரணமாக - அவைகளில் சுய புணர்ச்சி மிகவும் மூர்க்கத்தனமானது என்று கருதுகின்றனர். சுய புணர்ச்சிகாரரர்களைக் காட்டிலும், வேசித்தனக்காரர்கள் பரலோகத்திற்கு போவார்கள் என்பதற்கான எந்தவித வாய்ப்புகளும் இல்லை.

3. *இந்த பாவங்களின் செயலால் குற்றப்பட்டிருந்தவர்கள், கொரிந்து பட்டணத்து சபையின் அங்கத்தினராயிருந்தனர்*. பவுல் தொடர்ந்து அதிர்ச்சியான வாக்கியமாகிய. "உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று குறிப்பிட்டார் (6:11அ). "நீங்களெல்லாரும் அப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று கூறவில்லை. கொரிந்து பட்டணத்திலிருந்த எல்லா அங்கத்தினர்களுமே பவுல் வரிசை படுத்தின பாவங்களுக்கு உட்பட்டிருக்க வில்லை.

இருந்த போதிலும், கொரிந்து பட்டணத்து சபை, திருடர்களையும், உதாசினர்களையும், விக்கிரக ஆராதனைக்காரரர்களையும், விபச்சாரக்காரரர்களையும் சுய புணர்ச்சிக்காரரர்களையும் வேறு தரப்பட்ட பாவங்களையும் செய்வோரைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இதை கற்பனை பண்ணிக்கூடப் பார்ப்பது நமக்கு கடினமாகத் தோன்றலாம்!

சில சகோதரர்கள், சபைக்குள்ளாக, நம்மைப்போல, நீதியுள்ள, மதிப்புக்குரிய அங்கத்தினர்களாக இருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட புதிய அங்கத்தினர்களாக வரவேற்பார்கள்! எப்படியிருப்பினும், கர்த்தர் அப்படிப்பட்ட வழியில் செயல் படுவதில்லை. பாவிகளை இரட்சிக்கவே அவர் வந்தார் (லூக்கா 19:10). அவர் ஆயக்காரரர்கள் வீட்டிலும் பாவிகளுடைய வீட்டிலும் போஜனம் பண்ணினார் (லூக்கா 15:1, 2). அவர் இழந்து போனோரை நேசிக்கிறார் - இழிவாகக் கருதப்

*பட்டவர்களையும், "தேவனுடைய இராஜ்யத்துக்கு தூரமானவர்களாய் இல்லாதவர்களையும்" ஆகிய அனைத்து இழந்து போனோரையும் அவர் நேசிக்கிறார் (மாற்கு 12:34 ஐக் காண்க). இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டுச் சபையில் ஒவ்வொருவரும் வரவேற்கப்பட்டார்கள் - இதற்கு முன்பாக அவர் எப்படிப்பட்ட பாவியாக வாழ்ந்தார் என்பது பற்றி அக்கரையில்லை!*

*இந்த ஒப்புமையை ஆராய்வோம்: ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட தன்னை எப்படித் தகுதியுள்ளவராக்கிக் கொள்கிறார்? அவர் வியாதிப்பட்டிருக்கிறார்! அதேபோலத்தான், நமது கர்த்தருடைய சபையில் ஒருவர் நுழையத் தேவையான தகுதி அந்த நபர் ஆவிக்குரிய வியாதிப்பட்டவராயிருக்கிறார்! அவர் ஒரு பாவி! எந்தப் பாவியாயினும் - அவனோ அவளோ செய்த பாவம் எதுவாயிருந்தாலும் - கிறிஸ்துவின் சபைக்குள் வர வரவேற்கப்படுகிறார்கள், இது பாவிகளுக்கான மருத்துவமனை!*

## சபையிலிருக்கும் பாவிகள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர் (6:11ஆ)

**கொரிந்து சபையார்களுக்கு பவுலின் செய்தி**

*"உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று குறிப்பிட்ட பின், அவர்களின் எண்ணங்களின் தன்மையை உயர்த்தத் தக்கதான பாராட்டுதலையும் பவுல் கூட்டி, "ஆயினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்," என்று சொன்னார் (வசனம் 11ஆ).*

*அடிப்படையில், அதே கருத்தை பவுல் மூன்று வழிகளில் குறிப்பிடுகிறார். ஏன்? வலியுறுத்தலுக்காக. ஒரு வேளை பரவசப்படும் ஒரு சிறு பிள்ளை ஒரு விளையாட்டுப் போட்டியில் ஜெயித்து விட்டால், என்ன செய்யுமோ அதையே பவுலும் செய்தார் போலும்; அந்த சிறு பிள்ளை ஆச்சரியத்துடன். "நான் ஜெயித்து விட்டேன்! நான் ஜெயித்து விட்டேன்! நான் ஜெயித்து விட்டேன்!" என்று கூச்சலிடுவான். பவுல் சொல்லுவ தென்னவெனில், "உங்களுடைய முந்தின நிலைமை பயங்கரமாயிருந்தது! இழந்து போனவர்களாயிருந்தீர்கள், ஆனால் இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்! இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்! இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்கள்!"*

*இந்தக் கருத்துத் திரும்ப திரும்பக் கூறப்பட்டாலும், பவுலின் மூன்று வார்த்தைகளின் வெளியீடு உய்த்து உணரத்தக்க மூன்று வித்தியாசப் பட்ட உட்கருத்துக்களையும் அவை கொண்டிருந்தன. "ஆயினும் நீங்கள் கழுவப்பட்டீர்கள்" எனும் பதம் "கிறிஸ்தவர்களின்" பாவங்களுக்கு என்னவாயிற்று என்பதை விளக்கப்படுத்துகிறது. அவர்கள் கழுவப்பட்ட போது அவர்களின் பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டன. இந்த கழுவப்படுதல் விசுவாசத்திற்குப் பின் கொரிந்தியர் ஞானஸ்நானம் பெற்ற போது நிகழ்ந்தது (நடபடிகள் 18:8). "கழுவப்படுதல்" எனும் இந்தக் கருத்து, தண்ணீர் ஞானஸ்நானத்தைச் சுட்டிக் காட்டுகிறதாக அடிக்கடி புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது (நடபடிகள் 22:16; எபேசியர் 5:26; தீத்து 3:5).*

*"நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்" என்பது தேவனுடைய ஊழியத்திற்கென*

*“பிரித்தெடுக்கப்பட்டீர்கள்,” அல்லது “நீங்கள் தூய்மையாக்கப்பட்டீர்கள்” என்று பொருள் படும். தங்களுடைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, இந்த ஜனங்கள் தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள்; அவர்கள் ‘‘பரிசுத்தவான்களாக’’ அல்லது ‘‘சுத்திகரிக்கப்பட்டவர்களாக’’ மாறினவர்கள் (1 கொரிந்தியர் 1:2).*

*“நீங்கள் நீதிமான்களாக்கப் பட்டீர்கள்” என்பது “நீதியுள்ளவர்களாக்கப் பட்டீர்கள்’’ அல்லது எளிய வார்த்தையில் சொன்னால், ‘‘நீங்கள் தேவனிடத்தில் சரியாக்கப்பட்டீர்கள்’’ என்று பொருள். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன் அவர்கள் தேவனுக்கு முன் சத்துருக்களாய், அவரது கோபத்துக்கும் மரண தண்டனைக்கும் உட்பட்டவர்களாய் வாழ்ந்தவர்கள். நீதிமான்களாக்கப்பட்டபடியால், அவர்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்கள் மற்றும் தேவனுடைய அங்கீகாரம் பெற்றவர்கள் (ரோமர் 5:1, 10).*

*திருடரும், விபச்சாரக்காரரும் சுயபுணர்ச்சிக்காரர்களுமாயிருந்த இவர்களிடத்தில் என்னவொரு குறிப்பிடத்தக்க மாற்றம் இடம் பெற்றது! அவர்கள் மறுரூபமாக்கப் பட்டார்கள்; அவர்களுடைய நிலைமை மாற்றம் பெற்றது! இனியும் அவர்கள் இழந்து போனவர்களல்ல; அவர்கள் - கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு, நீதிமான்களாக்கப்பட்டவர்கள் - இரட்சிக்கப்பட்டவர்கள்!*

**நமக்கு பவுலின் செய்தி**

கொரிந்து பட்டணத்து சபையிலிருந்தவர்கள் பாவிகளாயிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்கள் என்பதால் நாம் களி கூர்ந்து மகிழ்கிறோம் - ஆகிலும் சிலர், ‘‘இந்த வசனப் பகுதி இன்று எனக்கு போதிப்பது என்ன?’’ என்று கேட்கலாம்.

*அவர்கள் இரட்சிக்கப்படக் கூடுமானால், நாமும் இரட்சிக்கப்பட முடியும்!* நாம் என்ன செய்தோம் என்பதோ, எவ்வளவாய் பாவம் செய்தோம் என்பதோ ஒரு பொருட்டல்ல, நாம் இரட்சிக்கப்படக்கூடும்! கிறிஸ்துவை கொலை செய்தவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட முடிந்தது எனில் (நடபடிகள் 2:23, 36-41), சபையைத் துன்புறுத்தி பிறகு தன்னைத் தானே “முதன்மையான” (KJV), அல்லது பிரதான பாவி என்று உணர்ந்த பவுல் (1 தீமோத்தேயு 1:15) - இரட்சிக்கப்படக்கூடுமானால், திருடரும், விக்கிரக ஆராதனைக்காரர்களும், சுய புணர்ச்சிக்காரரும் கொரிந்து பட்டணத்தில் இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடுமானால், பிறகு நாமும் கூட இரட்சிக்கப் படக் கூடும்!

*அவர்கள் இரட்சிக்கப்பட்டதுபோல நாமும் இரட்சிக்கப்படக் கூடும்!* வசனம் 11ல் ஒரு நபர் எப்படி கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு, நீதிமானாக்கப்பட முடியும் என்பதை விளக்கப் படுத்துகிறது: இது “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் தேவனுடைய ஆவியினாலும்’’ மட்டுமே சாத்தியமாகும். இந்த பெரிதான ஆசீர்வாதத்தைப் பற்றிக்கொள்ள வேண்டுமானால், இன்றைக்கு ஒருவர் கொரிந்தியர்கள் செய்தது போலவே - முதல் நூற்றாண்டில் சுவிசேஷத்துக்குப் பதில் செயல் செய்தவர்களைப் போலவே - நாமும் செய்ய வேண்டும். அவனோ அவளோ இயேசுவை விசுவாசிக்க வேண்டும் (யோவான் 8:24); பாவத்திலிருந்து மனந்திரும்ப, அல்லது

*திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30); கிறிஸ்துவிலுள்ள தனது விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9, 10); பிறகு அவர் தனது பாவ மன்னிப்பிற்கென்று தண்ணீர் முழுக்கப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெற வேண்டும் (நடபடிகள் 2:38; மாற்கு 16:16; 1 பேதுரு 3:21).*

*தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் வல்லமை பெற்ற இரத்தத்தின் மூலமாக, கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு நீதிமான்களாக்கப்பட வேண்டிய அவசியத்தில் நீங்கள் இருக்கிறீர்களா? அனனியா சவுலுக்குச் செய்யச் சொன்னதை நீங்களும் செய்யும்படி நானும் உங்களை வலியுறுத்தட்டும்: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (நடபடிகள் 22:16). நீங்கள் இழந்து போயிருக்கும் நிலையை உணருங்கள், அதை மாற்றத் தீர்மானியுங்கள்.*

## பாவிகளாயிருந்து சபைக்குள் இருப்பவர்கள் பாவம் செய்யாதிருப்பார்களாக

**பாவம் கடந்த காலச் செயலாக இருக்க வேண்டும்**

*6:11ல்* சொல்லப்படுகிற காலத்தைக் கவனியுங்கள்: ''உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்*களாயிருந்தீர்கள்*'' (எனது வலியுறுத்தல்). ''இருந்தீர்கள்'' என்பது கடந்த காலத்தைக் குறிப்பிடும் சொல். இன்னொரு வார்த்தையில் சொன்னால், விபச்சாரக்காரர்கள் இனியும் விபச்சாரம் செய்வதில்லை; விக்கிரகாராதனைக்காரர்கள் இனியும் விக்கிரகங்களை தொழுது கொள்வதில்லை; திருடர்கள் இனியும் திருடுவதில்லை; சுய புணர்ச்சிக்காரர்கள் தங்கள் சுய புணர்ச்சியை விட்டு விட்டார்கள்!

''ஒழுக்கமுள்ளவர்களும்'' அல்லது ''மரியாதையுள்ளவர்களும்'' தான் சபைக்குள் - கிறிஸ்துவின் பாவிகளுக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு தகுதியுள்ளவர்களல்ல - யார் வேண்டுமானாலும் அனுமதிக்கப்படுவர் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர வேண்டும். பாவிகள் யாராயிருந்தாலும், அவர்கள் என்ன செய்திருந்தாலும், அவர்கள் தேவனுடைய இராஜ்யமாகிய கர்த்தருடைய சபைக்குள், பாதுகாப்பின் மந்தைக்குள் வரவேற்கப்படுகிறார்கள்.

அந்த பாதுகாப்பின் மந்தைக்குள் நுழையும் போது, நாம் மனந்திரும்பவேண்டும். நாம் அந்த பாதுகாப்பான மந்தைக்குள் நிழையும்போது நாம் மனந்திரும்ப வேண்டும் என்பது அதே அளவு முக்கியமான சத்தியமாயிருக்கிறது. அதாவது நாம் - உலகத்திலிருக்கும் போது நடப்பித்துக் கொண்டிருந்த பாவங்களை இனியும் செய்யாதபடிக்கு தீர்மானிக்க வேண்டும் என்பதும் அதே போல முக்கியமானது. என்ன பாவத்தை செய்திருந்தாலும், இனியும் அதைச் செய்யாமல் நிறுத்துவது தான் மனந்திரும்புதல்!

**சபை ஒரு உதவி செய்கிற குழுவாக இருக்க வேண்டும்**

ஒரு வேளை, சபையை ஒரு மருத்துவமனைக்கு ஒப்பிடுவதற்குப் பதிலாக, அதை ஒரு புனரமைப்பு மையத்திற்கோ, அல்லது பரஸ்பர உதவி குழுவிற்கோ

ஒப்பிடலாம். "பன்னிரண்டு படி குழுக்கள்" போன்ற குடிபழக்கத்தை நிறுத்த உதவும் குழுக்கள் அறிவுரை வழங்குதல், ஊக்கமளித்தல், தங்களுடைய வாழ்வுக்கு பொறுப் பேற்றுக் கொள்வது, போன்றவற்றை, தங்கள் வாழ்வை மாற்றியமைக்க முயற்சிப்போருக்குச் செய்கின்றனர். நாம் எல்லாரும் இந்த உதவும் குழுவில் ஒரு அங்கமாக இருந்து, பொதுவான பிரச்சனைகளை மேற்கொள்ள ஒருவருக்கொருவர் உதவ முயற்சிக்க வேண்டும். நம்மில் எல்லாருக்குமே பலவீனங்கள் உண்டு; நாம் பாவம் செய்ய சோதிக்கப்படுவோம். எப்படியாயினும், நாம் முன்பு செய்து கொண்டிருந்த பாவ வாழ்விற்கு வழுவிப் போகாமல், ஒன்றாகச் சேர்ந்து, நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சபையின் இந்த எதிர் நோக்கம் பயன்களையும் தேவைகளையும் வலியுறுத்துகிறது. பரஸ்பர உதவிகளை நமக்கு நாமே செய்து கொள்ளும் போது, நம்மிலே யாருமே மற்றொருவரைக் காட்டிலும் மேலானவர் என்ற உணர்வைப் பெற இயலாது. ஒரு கிறிஸ்தவன் பொருளாசையாலோ, பேராசையாலோ போராடிக் கொண்டிருக்கையில், இன்னொருவர் ஒழுங்கீனக் காரியங்களில் போராடலாம். வேறு சிலர் பொய்களையும், அல்லது கோபங்களையும் மேற் கொள்ள முயற்சிக்கலாம். நாம் எல்லாரும் மேலும் மேலும் இயேசுவைப் போலிருக்க முயற்சிக்கிறோம், மாமிச இச்சைகளை வெற்றி கொள்ளவும் தெய்வீக குணத்தை எடுத்துக் கொள்ளவும் முயற்சிக்கிறோம். நாம் எல்லாரும் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாயிருக்கிறோம்.

நாம் மெய்யாகவே பழைய மனிதனைக் களைந்து போட்டு, கிறிஸ்தவனாவதற்கு முன்பாக குற்றத்துக்கு ஆளான பாவங்களை விட்டு விட வேண்டும். கிறிஸ்து பாவிகளை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அவர் பாவத்தை சகித்து கொள்வதில்லை! தேவனுடைய கோபாக்கினையால் - இரட்சிக்கப்படக்கூடாத அளவுக்கு ஒருவர் பாவம் செய்யக் கூடும் என்று நினைப்பதில் ஆபத்து இருப்பது போலவே - தேவனுடைய கிருபையினால் - ஒருவர் தொடர்ந்து பாவம் செய்தாலும் கிருபை தொடரும், தேவன் எப்போதும் மன்னித்துக் கொண்டே இருப்பார் - என்ற நினைவும் ஆபத்தானது. தேவன் மன்னிப்பார்; ஆனால் நீங்கள் மனந்திரும்பவேண்டும்! மனந்திரும்பதல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நாம் பாவத்தை செய்யாமலிருக்க இயன்ற வரை முயற்சித்து தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

## முடிவுரை

கிறிஸ்துவின் மருத்துவமனையாகிய அவருடைய சபை சம்பந்தப் பட்டக் காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் சபைக்குள் இருக்கிறீர்களா? தாழ்வு மனப் பான்மையினால் நீங்கள் ஒரு வேளை சபையில் அங்கம் வகிக்கத் தாமதித்துக் கொண்டிருக்கலாம்.நீங்கள் மிகவும் பாவம் நிறைந்தவராயும், கிறிஸ்தவனாக வாழக் கூடிய அளவுக்கு நல்லவரல்ல என்றும் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை சபையில் உங்களுக்கு உரிய வரவேற்பு கிடைக்காது என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை சபையின் ஆராதனையில் கலந்து கொண்டிருக்கையில், "நான் இந்த இடத்துக்குரியவனல்ல," என்று நினைக்கலாம். அப்படியிருக்குமானால் உங்களுக்காக நான் ஒரு செய்தியை வைத்திருக்கிறேன். சபையிலே உங்களுக்கும் உடமையுண்டு,

*சபையில் உங்களுக்கும் உடமை இருக்கிறது என்ற உணர்வைப் பெற வாய்ப்புண்டு. சபைக்குள் நீங்கள் நுழைய கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட வேண்டும்.*

*நீங்கள் ஒரு வேளை இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தால், எப்பொழுதும் போல் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இது தான் உண்மையெனில் உங்கள் வாழ்க்கையை முற்றும் எதிரிடையாக திருப்பவேண்டியது அவசியமாயிருக்கிறது. நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி (நடபடிகள் 8:22), அதை அறிக்கையிட்டு (1 யோவான் 1:9), பாவமன்னிப்பிற்கென தேவனிடத்தில் ஜெபித்து கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்ப முடியும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16). சபை எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருக்க நீங்கள் உதவி செய்யலாம், தேவன் நீங்கள் எப்படியிருக்க வேண்டு மென்று விரும்புகிறாரோ அப்படியிருக்க சபை உதவட்டும்!*

---

குறிப்பு

[1]James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 88.